


**13.12. 2024**

**தலைப்புச் செய்திகள்**

**1.** இந்திய அரசியல் அமைப்பு சாசனம் தேச கட்டமைப்பிற்கு வழிகோலுவதாக பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

**2.** நாடாளுமன்றத்தில் தீவிரவாதிகள் தாக்குதலில் உயிரிழந்த 9 பேரின் நினைவாக இருஅவைகளிலும் இன்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

3. உலக செஸ் சேம்பியன் பட்டம் வென்ற குகேஷிற்கு ஐந்து கோடி ரூபாய் ரொக்கபரிசை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

**4.** தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததை அடுத்து நீர்நிலைகளில் நீர்மட்டம் உயர்ந்துவருகிறது.

**5.** திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் ஆலய மலை உச்சியில் கார்த்திகை மகா தீபம் இன்றுமாலை ஏற்றப்படுகிறது.

**இனி விரிவான செய்திகள்**

********

**ராஜ்நாத்சிங்**

சமூக பொருளாதார அரசியல் கலாச்சார சிறப்புகளுடன் இந்திய அரசியல் அமைப்பு சாசனம் தேச கட்டமைப்பிற்கு வழிகோலுவதாக பாதுகாப்பு அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் அரசியல் சாசனத்தின் 75ஆவது ஆண்டு சிறப்பு விவாதத்தை இன்று துவக்கிவைத்து பேசிய அவர் நாட்டின் குடியுரிமை மதிப்பீடுகளின் வெளிப்பாடாக நமது அரசியல் சாசனம் திகழ்கிறது என்றார்.

75 ஆண்டுகளுக்கு முன்னர் சுதந்திர இந்தியாவிற்காக நமது அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டதாக கூறிய அவர், நமது அரசியல் சாசனம் வெறும் ஆவனம் அல்ல மக்களின் உறுதிபாட்டை அது எடுத்துரைப்பதாக கூறினார்.

நமது அரசியல் சாசனம் தனிப்பட்ட கட்சிக்கு உரித்தானது அல்ல என்று கூறிய அவர் ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் உரியது என்றார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் சீரிய தலைமையில் அனைவருக்கும் வளர்ச்சி என்ற கோட்பாடுடன் அரசு செயலாற்றி வருவதாக அவர் எடுத்துரைத்தார்.

அனைத்தையும் உள்ளடக்கிய சீர்மிகு மாற்றங்களுடன் முன்னேற்ற பாதையை நமது அரசியல் சாசனம் பிரதிபலிப்பதாக கூறிய அமைச்சர் பல்வேறு தலைவர்கள் இணைந்து அரசியல் சாசனத்தை உருவாக்கியதாக எடுத்துரைத்தார்.

மதன்மோகன் மாள்வியா, லாலா லஜபதிராய், பகத்சிங், வீர்சாவர்க்கர் உள்ளிட்டோர் நமது அரசியல் சாசன அமைப்பை வலுப்படுத்தியதாகவும் திரு.ராஜ்நாத்சிங் குறிப்பிட்டார்.

********

**நாடாளுமன்ற தினம்**

நாடாளுமன்றத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த 9 பேரின் நினைவாக இருஅவைகளிலும் இன்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

மக்களவை இன்று கூடியதும் இச்சம்பவத்தை நினைவு கூர்ந்த மக்களவை தலைவர் திரு.ஓம்.பிர்லா வீரத்துடனும், துணிச்சலுடனும் தீவிரவாதிகளை எதிர்கொண்டு இந்த 9 பேரும் செயலாற்றியதாக புகழாரம் சூட்டினார்.

தீவிரவாதத்தை வலிமையுடன் எதிர்க்க உறுதி ஏற்பதன் அவசியத்தை திரு.ஓம்.பிர்லா வலியுறுத்தினார்.

மாநிலங்களவை தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் ஒருமைப்பாட்டுடன் அனைவரும் இணைந்து நின்று தீவிரவாதத்தை எதிர்ப்பதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

தேச பாதுகாப்பிற்கான சவால்களை எதிர்கொள்ள விழிப்புடனும், ஒற்றுமையுடனும் இருப்பதை இத்தினம் எடுத்துரைப்பதாக அவர் குறிப்பிட்டார்.

2001ஆம் ஆண்டு இதேநாளில் நாடாளுமன்றத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 8 பாதுகாப்பு படையினர் மற்றும் மத்திய அரசின் தோட்ட பணியாளர் ஒருவர் தீவிரவாதிகளை தீரத்துடன் எதிர்த்து உயிரிழந்தனர்.

முன்னதாக குடியரசுத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வெளியிட்ட செய்தியில் இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் தியாகம் என்றென்றும் நினைவு கூறப்படும் என்று புகழாரம் சூட்டினர்.

உயிரிழந்தோரின் நினைவாக நாடாளுமன்ற வளாகத்தில் குடியரசு துணைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர், பிரதமர் திரு.நரேந்திரமோடி, மக்களவை தலைவர் திரு.ஓம்.பிர்லா மத்திய அமைச்சர்கள் உள்ளிட்டோர் மலர் அஞ்சலி செலுத்தினர்.

********

**குகேஷ்**

உலக சதுரங்க சேம்பியன் பட்டம் வென்ற இளம் வீரர் குகேஷிற்கு மக்களவையிலும் மாநிலங்களவையிலும் இன்று பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

அவரது சாதனையால் 2036ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளை நம் நாடு ஏற்று நடத்துவதற்கான உத்வேகத்தை வலுப்படுத்தியுள்ளதாக மாநிலங்களவை தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் புகழாரம் சூட்டியுள்ளார்.

நாட்டில் உள்ள இளம் விளையாட்டு வீரர்களுக்கு குகேஷின் சாதனை உந்துசக்தியாக இருக்கும் என்று மக்களவை தலைவர் திரு.ஓம்.பிர்லா பாராட்டு தெரிவித்துள்ளார்.

குகேஷின் சாதனையால் நாடு பெருமிதம் கொள்வதாக குறிப்பிட்டார்.

உலக செஸ் சாம்பியன் பட்டத்தை வென்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்த கிராண்ட் மாஸ்டர் குகேஷுக்கு 5 கோடி ரூபாய் பரிசுத்தொகை வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

மிக இளம் வயதிலேயே உலக சாம்பியன் பட்டத்தை வென்று, தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் அவர் பெருமை சேர்த்துள்ளதாக முதலமைச்சர் புகழாரம் சூட்டியுள்ளார்.

முன்னதாக குகேஷை தொலைபேசியில் முதலமைச்சர் தொடர்புகொண்டு வாழ்த்து தெரிவித்தார்.

********

**பிரதமர்**

உத்திரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் 5 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று பிற்பகல் தொடங்கிவைக்கிறார்.

அடுத்த மாதம் 13ஆம் தேதி இங்கு நடைபெறும் மகா கும்பமேளா முன்னேற்பாடு பணிகளை பிரதமர் இன்று நேரில் ஆய்வு செய்தார்.

********

**முதலமைச்சர் நிவாரணம்**

திண்டுக்கல்லில் தனியார் மருத்துவமனையில் நேற்றிரவு நேரிட்ட தீ விபத்தில் உயிரிழந்த 6 பேரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 3 லட்ச ரூபாய் நிவாரண உதவியை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

பலத்த காயமடைந்தோருக்கு தலா ஒரு லட்ச ரூபாயும், லேசான காயமடைந்தோருக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் நிதி உதவி வழங்க அவர் ஆணையிட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் 26 பேர் காயமடைந்த நிலையில் 3 பேருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

********

**வடகிழக்கு பருவமழை**

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது.

கன மழை காரணமாக பல்வேறு மாவட்டங்களில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் நெல்லை மாவட்டம் ஊத்துவில் 54 சென்டிமீட்டர் மழை பதிவாகியுள்ளது.

திருநெல்வேலி, திருவள்ளூர், கடலூர் தென்காசி, தஞ்சை திருச்சி அரியலூர், பகுதிகளில் கன மழை பதிவாகியுள்ளது.

டெல்டா மற்றும் உள்மாவட்டங்களில் பரவலாக தொடர் மழை பெய்வதால் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

இதனிடையே மழை நீடிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு.செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

**வாய்ஸ்**

**சென்னைக்கு குடிநீர் வழங்கும் செம்பரம்பாக்கம்,** பூண்டி, புழல் ஏரிகளில் இருந்து தண்ணீர் வெளியேற்றப்படுவதால் சுற்றுப்புற மக்கள் பாதுகாப்பாக இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**தூத்துக்குடி மாவட்டம் தாமிரபரணி ஆற்றில்** உபரிநீர் திறக்கப்பட்டுள்ளதால் கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு ஆட்சித்தலைவர் திரு.இளம்பகவத் கூறியுள்ளார்.

**கலெக்டர் வாய்ஸ்**

**கள்ளக்குறிச்சி மாவட்டம் மணிமுக்தா** அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் ஆறாயிரம் கன அடி உபரி நீர் பிரதான கதவு வழியாக வெளியேற்றப்படுகிறது.

**தென்காசி குற்றாலம் பிரதான அருவியில்** காட்டாற்று வெள்ளத்தின் காரணமாக பாலங்கள் சேதமடைந்துள்ளன.

செங்கோட்டை பகுதியில் பெய்த கன மழையால் தஞ்சாவூர்குளம் உடைந்து திருமங்கலம் - கொல்லம் தேசிய நெடுஞ்சாலை நீரால் சூழ்ந்த நிலையில் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் இரவு** முழுவதும் பெய்த மழையால் கும்பகரை அருவியில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகள் அருவியில் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**பெரம்பலூர் மாவட்டத்தில் தொடர் மழையால்** குன்னம் தாலுக்காவிற்கு உட்பட்ட வீரமாநல்லூர், வேல்விமங்கலம், ஓஹலூர் கிராமங்களில் தாழ்வான பகுதிகளில் வசித்து வந்த 96 பேர் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**நாகை மாவட்டம் வேளாங்கண்ணி** செபஸ்தியார்நகர் பூக்கார தெரு பகுதிகளை மழை வெள்ள நீர் சூழ்ந்ததால் ராட்சத பம்புகளை கொண்டு நீர் வெளியேற்றப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

**திருச்சி மாவட்டத்தில் தொடர் மழையால் மாநகராட்சி** பகுதிகளில் மழை நீர் சூழ்ந்து வீடுகளுக்குள் புகுந்துள்ளது.

மேலபுதூர் பாலம் உட்பட நீர் தேங்கியுள்ள பல்வேறு பகுதிகளில் இருந்து துரிதமாக தண்ணீரை வெளியேற்றுவதற்கான பணிகளை மேற்கொள்ள மாநில அமைச்சர் திரு.கே.என்.நேரு மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**இந்நிலையில் திருப்பூர் மாவட்டம் அமராவதி** நீர்பிடிப்பு பகுதிகளில் கன மழை காரணமாக வினாடிக்கு 36 ஆயிரம் கன அடி உபரி நீர் வெளியேற்றப்படுவதால் காவிரி ஆற்றுக்கு நீர்வரத்து அதிகரிக்க கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் முக்கொம்பு மேலணையிலிருந்து கொள்ளிடம் ஆற்றில் நாளை காலை 6 மணிமுதல் 25 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட இருப்பதால் காவிரி கொள்ளிட கரை மக்கள் பாதுகாப்பாக இருக்க மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் அறிவுறுத்தினார்.

**கோவை மாவட்டம் பொள்ளாச்சி வால்பாறை** பகுதிகளில் தொடர் மழை பெய்து வரும் நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு** ஆறாயிரத்து 384 கன அடியாக அதிகரித்துள்ளது.

**மழை காரணமாக கல்லணையிலிருந்து** திறந்துவிடப்படும் தண்ணீர் முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது.

**திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர்** அணைக்கு நீர்வரத்து 8 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

********

**முதலமைச்சர் - மழை**

தமிழ்நாட்டில் கன மழை நிவாரண பணிகளை முழுவீச்சில் மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

சென்னை எழிலகத்தில் மாநில பேரிடர் கட்டுப்பாட்டு அறையில் மழை நிலவரம் குறித்து இன்று ஆய்வு மேற்கொண்ட அவர் மழை பாதிப்புகளை எதிர்கொள்ள அரசு தயாராக இருப்பதாக கூறினார்.

அணைகள் ஏரிகள் திறப்பு குறித்து பொதுமக்களுக்கு முன்கூட்டியே எச்சரிக்கை விடுக்கப்படுவதாகவும், தெரிவித்தார்.

**வாய்ஸ்**

********

**ரயில்**

திண்டுக்கல் - திருச்சி ரயில்பாதையில் பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் தெற்கு ரயில்வே பல்வேறு மாற்றங்களை அறிவித்துள்ளது.

இதன்படி செங்கோட்டை - மயிலாடுதுறை

குருவாயூர் - சென்னை

கன்னியாகுமரி - ஹவ்ரா அதிவிரைவு ரயில் உள்ளிட்டவற்றின் வழிதடங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

********

**ஹேக்கத்தான்**

நாமக்கல் குமாரபாளையத்தில் நடைபெற்ற ஸ்மார்ட் இண்டியா ஹேக்கத்தான் போட்டியின் மென்பொருள் பதிப்பு தலைப்பில் நான்கு சவால்களுக்கு தீர்வு காணப்பட்டு வெற்றிபெற்ற மகராஷ்டிராவின் 2 அணிகளுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய்க்கான பரிசுதொகை வழங்கப்பட்டது.

கர்நாடகா உத்திரபிரதேசம் மேற்குவங்கம் பஞ்சாப் ஆகிய மாநில அணிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை வழங்கப்பட்டது.

********

**கோவில்**

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவிலில் திருகார்த்திகை தீபதிருவிழாவை ஒட்டி மலை உச்சியில் இன்றுமாலை மகாதீபம் ஏற்றப்படுகிறது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

********

**கிரிக்கெட்**

இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையேயான பார்டர் கவாஸ்கர் கோப்பைக்கான 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் நாளை தொடங்குகிறது.

5 Nghl;bfs; nfhz;l ,j;njhlhpy; ,U mzpfSk; jyh xU Nghl;bapy; ntw;wpngw;W rk epiyapy; cs;sd.

********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

********